**செ.வெ.எண்: 36** **நாள்: 27.08.2020**

**கரூர் மாவட்டம்**

**நுண்ணீர் பாசனத்தில் குழாய்கள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

**இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது:**

கரூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு அதற்கான குழாய்கள் அமைக்கும் மானியம் பெற வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அனுகலாம்.

கரூர் மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க தோட்டக்கலைத்துறையின் கீழ் 7,200 ஹெக்டர் பரப்பிளவிற்கு ரூ.50.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பாசன அமைப்பிற்கு தேவையான குழாய்கள் மற்றும் துணைக்குழாய்கள் அமைப்பதற்கு 1 1/4 முதல் 2 அடி அகலம் மற்றும் 2 அடி ஆழம் உள்ள குழிகள் தோண்ட 2.5 ஏக்கர் பரப்பிற்கு ரூ.3,000/- மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை இத்திட்டத்தின் கீழ் மானியம் பெறலாம். இத்திட்டத்தில் பயன்பெற புதிதாக நுண்ணீர் பாசனம் அமைக்கவுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள வட்டார தோட்டக்கலை அலுவலகத்தில் வங்கி கணக்கு புத்தக முகப்பு நகலுடன் பதிவு செய்ய வேண்டும். விவசாயிகள் தங்கள் நிலங்களில் நுண்ணீர் பாசனம் அமைத்தபின் தலைமை அலுவலகத்திலிருந்து 60% மானியம் விடுவிக்கப்படும். அதன் பின்னர் ரூ.3,000/- மானியம் சம்மந்தப்பட்ட விவசாயியின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தொடர்புக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் கரூர்-9751678794, 7904493818, தாந்தோணி-9790107117, 9597636982, அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி 9843643170, 9787707051, கிருஷ்ணராயபுரம் மற்றும் குளித்தலை 9994629884, 9047972919, 7708742596, தோகைமலை 9750262060, 7639484131 மற்றும் கடவூர் 9445117941, 9443751626 என்ற எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**